## சுருக்கம்

அரசு விழாக்கள், பொது நிகழ்ச்சிகள், கல்வி நிறுவனங்களில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படுவதை நெறிப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதல்கள் – மாநிலப் பாடலாக அறிவித்தல் (State Song) – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொது (பொது–1)த் துறை

அரசாணை (நிலை)எண்.1037 நாள்: 17–12–2021

பிலவ – மார்கழி 2

திருவள்ளுவராண்டு 2052

படிக்கப்பட்டது:

1. 1913ஆம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டறிக்கை அறிவிப்பு.
2. அரசாணை நிலை எண் 1393, பொதுத் (அரசியல்) துறை, நாள் 17.6.1970.
3. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அலுவலகக் குறிப்பு எண். 9909/பொ.கா/2021, நாள் 08.09.2021.

---

ஆணை:

"ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருள்அகற்றும் – ஆங்குஅவற்றுள்
மின்னேர் தனியாழி வெம்கதிரோன்; ஏனையது
தன்னேர் இலாத தமிழ்"

எனத் தண்டியலங்காரம் குறிப்பிடுவதைப் போல் தமிழர்களின் வாழ்வாக அவர்தம் உணர்வுக்கு ஒளியாகத் திகழ்வது தமிழ்மொழி. தமிழ்மொழி காலத்தால் மிகமிகத் தொன்மையானது. இலக்கண – இலக்கியச் செல்வாக்கையும் வரைமுறைகளையும் செவ்வனே பெற்றது. எண்ணங்களைத் துல்லியமாக வெளிப்படுத்திடும் சொல்வளம் மிகவும் படைத்தது. உணர்வுகளை நுட்பமாகவும் நேர்த்தியாகவும் ஊட்டிடும் நயம் மெத்தவும் மிக்கது. எண்ணங்களை, ஏற்பாடுகளை – கொள்கைக் கோட்பாடுகளை வழுவாமல், பிறழாமல் குறித்துணர்த்திக் கூறிடும் சொல்லாட்சியும் உடைத்தானது.

2. அத்தகைய ஒப்புயர்வற்ற உயர்தனிச் செம்மொழியாம் இலக்கண, இலக்கிய வளங்கள் நிறைந்த தமிழ்மொழியைத் தாயாகப் போற்றும் தமிழர், தம் அன்னையை வாழ்த்திப் பாடப் பாடல் ஒன்றைப் பொதுவாக ஏற்கவேண்டும் என்ற உள்ளக்கிடக்கையை ஒரு நூற்றாண்டுக்கும் முன்னதாகவே வெளிப்படுத்தியுள்ளனர். இதனைத் தமிழறிஞர்களும் தமிழ் ஆர்வலர்களும் இலக்கிய அமைப்புகளும் தமிழ்ச் சங்கங்களும் பொதுமக்களும் தொடர்ந்து வலியுறுத்தியும் வந்துள்ளனர்.

3. பார்வை 1இல் படிக்கப்பட்ட அறிக்கையின்படி, தமிழ்நாட்டின் அனைத்து விழாக்களிலும் மனோன்மணீயம் சுந்தரனார் எழுதிய "நீராரும் கடலுடுத்த" எனும் பாடல் பாடப்பட வேண்டும் என்கிற கோரிக்கை, 1913ஆம் ஆண்டைய கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் ஆண்டறிக்கையில் இடம்பெற்றது. இந்தப் பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக, 1914ஆம் ஆண்டு முதல், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாக்களில் பாடி வந்துள்ளார்கள். மேலும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைத் தாய்ச் சங்கமாகக் கொண்டு தமிழகத்தின் பல பகுதிகளில் உருவான தமிழ்ச் சங்கங்களின் விழாக்களிலும் தொடக்கப் பாடலாக இப்பாடல் பாடப்பட்டது.

4. இதனைத் தமிழக அரசின் பாடலாக அறிவிக்க வேண்டும் என்பதை அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாவுக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்க நிர்வாகிகள் கோரிக்கையாக வைத்தார்கள். தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, 1970ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11ஆம் நாள் அன்று நடந்த அரசு விழாவில் அப்போதைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேசும்போது, "இனித் தமிழக அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து இருக்கும். 'நீராரும் கடலுடுத்த' எனும் மனோன்மணீயம் சுந்தரனார் இயற்றிய பாடலே தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக அமையும்" என்று அறிவித்தார்கள்.

5. பார்வை 2இல் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 1891இல் வெளியிடப்பட்ட புகழ்பெற்ற நாடக நூலான மனோன்மணீயம் நூலில் உள்ள பாயிரத்தில் தமிழ்த்தெய்வ வணக்கம் எனும் தலைப்பிலுள்ள பாடலின் ஒரு பகுதியில் தமிழ்த்தாயைப் போற்றும் வகையில் அமைந்த வரிகளை ஏற்றுத் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை 1970ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23ஆம் நாள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அன்றைய தமிழ்நாடு அரசு தமிழ்த்தாய் வாழ்த்தாக அறிவித்ததோடு உரிய அரசாணையும் வெளியிட்டுள்ளது.

6. அவ்வரசாணையைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் அரசு விழாக்களில், கல்வி நிலையங்களில், பொதுநிறுவனங்களில், பொது நிகழ்ச்சிகளில் நிகழ்வு தொடங்குவதற்கு முன்னதாகத் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்பட்டு வருகிறது. இந்நிலையில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்படுவதற்குச் சில வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டிய காலச் சூழ்நிலையை ஒட்டி, பார்வை

மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தின்படித் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் மூலம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை இசை வட்டுக்களைக் கொண்டு இசைக்கப்படுவதைத் தவிர்த்துப் பயிற்சி பெற்றவர்களால் வாய்ப்பாட்டாகப் பாடப்பட வேண்டும் எனவும் சமீபத்தில் ஆணையிடப்பட்டுள்ளது.

7. இந்நேர்வில், அன்னைத் தமிழ்மொழியைப் போற்றிடும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்படுவதை ஒருங்கிணைத்து, நெறிமுறைப்படுத்த வேண்டிய நிலையில், கீழ்க்கண்ட வழிமுறைகளைத் தவறாது கடைபிடிக்க வேண்டுமெனக் கருதி, அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(அ) மனோன்மணீயம் சுந்தரனார் இயற்றிய பின்வரும் வரிகளைக் கொண்ட தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக அறிவிக்கப்படுகிறது.

(ஆ) பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிட்டுள்ள மனோன்மணீயம் சுந்தரனார் இயற்றிய பின்வரும் வரிகளை 55 வினாடிகளில் முல்லைப்பாணியில் (மோகன ராகம்) மூன்றன் நடையில் (திசுரம்) பாடப்படவேண்டும்.

*"நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்*
*சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்*
*தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்*
*தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!*
*அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற*
*எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே! தமிழணங்கே!*
*உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து*
*வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!"*

(இ) தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அனைத்துக் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும், நிகழ்வு தொடங்குவதற்கு முன்பு தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் பாடப்பட வேண்டும்.

(ஈ) தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்படும்போது அனைவரும் தவறாமல் எழுந்து நிற்க வேண்டும்.

(உ) மாற்றுத் திறனாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோருக்கு இவ்வரசாணையின்படித் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்படும்போது எழுந்து நிற்பதில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

(ஊ) பொது நிகழ்வுகளில் "தமிழ்த்தாய் வாழ்த்து" இசைவட்டுக்களைக் கொண்டு இசைக்கப்படுவதைத் தவிர்த்து, பயிற்சி பெற்றவர்களால் வாய்ப்பாட்டாகப் பாடப்பட வேண்டும்.

(எ) அன்னைத் தமிழின் பெருமையை உலகறியச் செய்வதிலும், இளம்தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதிலும், பொதுமக்களும், தனியார் அமைப்புகளும் பெரும்பங்காற்ற முடியும் என்பதால், தமிழ்நாட்டில் தனியார் அமைப்புகள் நடத்திடும் கலை, இலக்கியம், பொதுநிகழ்வுகள் ஆகியவற்றின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்படுவது ஊக்குவிக்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ. இறையன்பு
தலைமைச் செயலாளர்

பெறுநர்

அனைத்துத் துறைச் செயலாளர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்துத் துறைத் தலைமை அலுவலகங்கள்.

<u>நகல்:</u>

தலைமைச் செயலாளரின் முதன்மைத் தனிச்செயலர்.
பொதுத்துறைச் செயலாளரின் முதுநிலைத் தனிச்செயலர்.
சிறப்புச் செயலாளரின் முதுநிலை முதன்மைத் தனிச்செயலர்.
துணைச் செயலாளரின் (மரபு) நேர்முக உதவியாளர்.

-/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/-

17/12/21

பிரிவு அலுவலர்

17/12/2021